# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● பிப்ரவரி 25, 2024

Weekly E-paper ● February 25, 2024


# குதிரை பேரங்களும் குறுக்கு வழிகளும்!

சுப. வீரபாண்டியன்



## பா.ஜ.க.வின் பத்தாண்டு வளர்ச்சி ? பொய்களே !

சாரதா தேவி

## கரணம் தப்பினால் மரணம்

தலையங்கம்

## அதிகார வரம்பு மீறல் பாஜகவுக்கு 335 கோடியா?

எழில்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● பிப்ரவரி 25, 2024 Weekly E-paper ● February 25, 2024


# குதிரை பேரங்களும் குறுக்கு வழிகளும்!

## சுப. வீரபாண்டியன்

பின்னால் வரும் யானையை முன்கூட்டியே அறிவிக்கும் மணியோசை போல, வரப் போகும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, குதிரை பேரங்கள், அமலாக்கத்துறை மிரட்டல்கள் எல்லாம் தொடங்கி விட்டன!

இதோ, பாஜகவில் சேர போகிறார்.... இன்னும் கொஞ்ச நேரம்தான் சேர்ந்து விடுவார்.... எல்.முருகன் முன்னிலையில் சேர்ந்தே விட்டார் என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் விஜயதாரணி குறித்த செய்திகள் ஒரு புறம்!அதிமுகவிலிருந்து கொத்துக் கொத்தாகக் கட்சியின் முக்கியமான உறுப்பினர்களை அண்ணாமலை அள்ளிக் கொண்டு போய் விட்டார் என்னும் செய்தி மறுபுறம்! இவற்றுக்கிடையே, ஜம்மு காஷ்மீரின் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் உள்பட, பலர் அமலாக்கத்துறையின் மிரட்டல்களுக்கு ஆளாகிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதும் இன்றைய அன்றாடச் செய்திகள்!



முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக், உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் இருக்கிறார். கடந்த 22 ஆம் தேதி அவருடைய வீடு, உறவினர்கள் வீடு, நண்பர்களின் அலுவலகங்கள் என்று 29 இடங்களில், நூற்றுக்கணக்கான அதிகாரிகள் புகுந்து சோதனைகள் நடத்தினர். இன்று வரை எந்த ஒரு பத்திரத்தையோ, கோடிக்கணக்கான பணத்தையோ எடுத்ததாகத் தகவல் இல்லை!



“என் வீட்டில் துணிகளைத் தவிர வேறொன்றுமில்லை. என்னென்ன ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன ? “என்று அதிகாரிகளைச் சொல்லச் சொல்லுங்கள் என்று கூறும் சத்தியபால், நான் ஒரு விவசாயியின் மகன். இந்த மிரட்டல்களுக் கெல்லாம் அஞ்ச மாட்டேன் என்றும் கூறியிருக்கிறார்!

அதிமுகவில் இருந்து பலரை அண்ணாமலை கைப்பற்றி விட்டாரே என்று ஒரு நிருபர் கேள்வி கேட்க, அவர்களில் ஐந்து பேர் அல்லது மூன்று பேர்களின் பெயர்களையாவது சொல்லுங்கள் என்று திருப்பிக் கேட்க, விடை தெரியாமல் நிருபர் விழிக்கிறார். இதுதான் அவர்கள் ஆள் பிடிக்கும் பட்டியலின் லட்சணம்!

இப்போது விஜயதாரணியைக் கட்சிக்கு அழைத்து வந்து விட்டோம் என்று வெற்றிப் பேரிகை கொட்டுகிறார்கள். பாஜகவை நினைத்தால் கொஞ்சம் பரிதாபமாகத்தான் இருக்கிறது! நாடாளுமன்றத் தேர்தலில் அவர்தான் பாஜகவின் வேட்பாளர் என்றும் சொல்கிறார்கள். அப்படிச் செய்வது நல்லதுதான்! அப்போதுதான் பாஜகவின் முகம் மக்களுக்குப் பளிச்சென்று தெரியும்!

கடந்த 10 ஆண்டுகளில் தாங்கள் மக்களுக்குச் செய்த நன்மைகளை, சாதனைகளை எடுத்துச் சொல்லாமல், ஏன் இப்படி ஆள் பிடிக்கும் வேலையில் அலைகிறது பாஜக என்று கேட்கத் தோன்றும்! கடந்த 10 ஆண்டுகளில் அவர்கள் செய்திருப்பவைகளை எல்லாம் சொன்னால், வருகிற வாக்குகளும் வராமல் போய்விடுமே என்கிற கவலைதான் காரணமாக இருக்க முடியும்!

அடுத்து வரும் இரண்டு மாதங்களில் இன்னும் என்னென்ன தில்லுமுல்லுகள் அரங்கேறப் போகின்றன என்பதை யார் அறிவார்? ●

# பா.ஜ.க.வின் பத்தாண்டு வளர்ச்சி? பொய்களே !

## சாரதாதேவி

மகாராஷ்டிராவில் நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கர்நாடகாவில் கல்புர்க்கி, கௌரி லங்கேஷ், ஆகியோரைக் கொன்று அறிவுச் சமூகத்தைப் பேரச்சம் கொள்ளச் செய்து தங்கள் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டினர் பா.ஜ.க.வினர். இன்றுவரை பத்திரிகையாளர்கள் மிரட்டப்பட்டும், விரட்டப்பட்டும், வருகிறார்கள். மசூதிகள், தேவாலயங்கள் குறிவைத்து இடிக்கப்படுகின்றன. எல்லா அரசு தன்னாட்சி நிறுவனங்களும் சிதைக்கப்பட்டு இருக்கின்றன.

மறுபக்கம் அம்பானி உலகின் பணக்கார வரிசையில் இடம்பிடிக்கிறார். அடையாளம் இல்லாத அதானி பேருரு எடுக்கிறார். பெருமுதலாளிகளின் வரி 33 விழுக்காட்டிலிருந்து 22 விழுக்காட்டுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது.

25 லட்சம் கோடி வரை பெருமுதலாளிகளின் வங்கிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.

பாரதிய ஜனதா கட்சியின் கல்லா நிரம்பிக் கொண்டே இருக்கிறது. அடுத்த 20 ஆண்டுகளுக்குத் தேவையான பணத்தை அவர்கள், தேர்தல் பத்திரம், பி.எம்.கேர்.நிதி என அரசமைப்பு விதிகளை வளைத்துச் சேர்த்தது ஒரு புறம். பெருமுதலாளிகளுக்குச் சேவகம் செய்துத் தரகுத் தொகை பெற்றது மறுபுறம். இது போக பொதுத்துறைகளை விற்பதிலும் தரகுத் தொகை எனக் கொள்ளை நடந்துகொண்டிருக்கிறது.

சாமான்ய மக்களுக்கு இதில் எல்லாம் கவனம் போகக்கூடாது. 'ஜெய்ஸ்ரீராம்'அதற்கான ஒரு போதை. அது மட்டும் போதுமா? இன்னும் இவர்களை மக்கள் நம்பவேண்டும் என்றால் ஒரு போலி நம்பிக்கையிலாவது வைத்திருக்க வேண்டும். எப்படி வைத்திருப்பது? அள்ளி அள்ளிப் பொய்களை வீசினால்? அப்படித்தான் பொய்களுக்கு மேல் பொய்யாகக் கடந்த 10 ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

15 லட்சம் ரூபாய் கருப்புப் பண மீட்புத் தொகை எல்லா பொதுமக்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் எனத்தொடங்கிய பொய், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை வரை தொடர்கிறது. (கடந்த பிப்ரவரி 1 அன்று வெளியிடப்பட்ட ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் பொருளாதாரச் செய்திகளில் மானே தேனே சொற்களே அதிகம் இருந்ததாக 'பிசினஸ் டைம்ஸ்' நாளிதழ் சுட்டி இருந்தது.) 15 லட்சம் ரூபாய் ஒருவர் கணக்குக்கும் வரவில்லை என்பது இருக்கட்டும். ஒரு ரூபாய் கருப்புப் பணம் கூட நாட்டிற்கே வரவில்லை. பல நூற்றுக் கணக்கான குடிமக்கள் பணமதிப்பிழப்பின்போது வரிசைகளில் நின்று பட்ட துன்பம், இறந்ததுதான் மிச்சம்.

"ஜன் தன்" என்று சொல்லி இனி எல்லா மானியங்களும் வங்கிகளின் மூலம் தான் கிடைக்கும் என்றார்கள். நேரடியாக விலைக் குறைப்பாகக் கிடைத்துக்கொண்டிருந்த மானியங்களை வங்கியில் செலுத்துவதாக ஏமாற்றி, சிறுக சிறுக ஒழித்தே விட்டார்கள்.

மாநிலங்களின் வருவாயாக இருந்த விற்பனை வரியை நீக்கி இந்தியா முழுக்க சரக்கு சேவை வரியை அறிமுகப்படுத்தியது பா.ஜ.க அரசு. அப்போது சொன்னது என்ன? ஜி.எஸ்.டி வந்தால் நடுத்தர வர்க்கத்தின் வரிச்சுமை குறையும் என்று. என்ன நடந்தது? பல தொழில்கள் முன்வரி கட்டவேண்டிய நிர்ப்பந்தத்தால் படுத்துவிட்டன. வரியைக் கட்டி வாங்குவதற்கு சிறு வணிகர்கள், சிறுதொழில் முனைவோர் கூட கணக்காளர்களுக்கு செலவு செய்ய வேண்டி வந்தது. நேரடி வரிகளான வருமான வரியையும், சொத்து வரியையும், பெருநிறுவன வரிகளையும் குறைத்தது ஒன்றிய அரசு. ஆனால் சரக்கு சேவை வரியை பல மடங்கு உயர்த்தியது. பெட்ரோல், டீசல் வரிகளைப் பல மடங்காக உயர்த்தியது. அதனால் சுமைகள் முழுக்க நடுத்தர வர்க்கத்தினரின் மீது விழுந்தது என்பதுதான் உண்மை.

வருவாய் வழி அடைக்கப்பட்டு, ஒன்றியத்திடம் ஒவ்வொன்றுக்கும் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கின்றன மாநிலங்கள். அவர்களுடைய பாகுபாட்டு அரசியலுக்கும், கொள்ளையடிக்கும் அரசியலுக்கும் கடுமையாக உழைக்கும் மாநிலங்களின் வரி வருவாய் வீணடிக்கப் படுகிறது. குஜராத் முதல்வராக இருந்தபோது ஒன்றிய வருவாயில் 50% பங்கு கேட்ட மோடி, இன்று ஏன் இப்படி வெட்கமில்லாமல் கேட்கிறீர்கள் என மாநிலங்களைத் திருப்பிக் கேட்கிறார்.

ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றார் மோடி, 2014 தேர்தல் அறிக்கையில். நடந்தது என்ன? 10 ஆண்டுகளில் 20 கோடி வேலை வாய்ப்புகள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 2013 இல் 17.3 லட்சங்கள் இருந்த அரசு ஊழியர்கள் 2022இல் 14.6 லட்சங்களாக குறைந்திருக்கிறார்கள் என்கிறது இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மய்யம்(CMIE) எனும் ஒரு தனியார் நிறுவன ஆய்வு. இளைஞர் வேலையின்மை விழுக்காடு 24 விழுக்காடாக அதிகரித்திருக்கிறது. இது இரான், சிரியா நாடுகளை ஒத்தது என்கிறார், பொருளாதார நிபுணர், பர்க்கலா பிரபாகர்.

2014இல் விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக்குவோம் என ஆட்சிக்கு வந்தார்கள். இன்று விவசாயிகளின் நிலை? குறைந்த பட்ச ஆதாரவிலை என்ற பாதுகாப்பு அம்சத்தையே தூக்கிவிட்டு, பெரு நிறுவனங்களுக்குச் சாதகமாக புதிய 3 விவசாயச் சட்டங்கள் இயற்றினார்கள். அதற்கேற்ப பெரும் கிடங்குகளை சட்டத்திற்கு முன்பே கட்டி முடித்தார்கள். 14 மாதங்களுக்கு மேல் புதுதில்லியின் சாலைகள் எங்கும் நிறைத்துக் கொண்ட விவசாயிகள் 700 பேருக்கு மேல் போராட்டத்தில் கொல்லப்பட்ட பின்னர், அவை விலக்கிக்கொள்ளப்பட்டன. குறைந்த பட்ச ஆதார விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்காக இன்றும் அவர்கள் தலைநகரைச் சுற்றித் திரண்டிருக்கிறார்கள். களப்பலிகள் தொடங்கிவிட்டன. இன்னும் என்ன பொய் சொல்லலாம் எனக் கூடி விவாதித்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க கூடாரம்.

ஒரு நாளைக்கு 30 விவசாயிகளும், 17 விவசாயக் கூலிகளும் தற்கொலை செய்துகொண்டு இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு 1 லட்சம் வரை வட்டியில்லாக் கடன் என்று 2019இல் அறிவித்தார்கள். இன்று வரை ஒரு பைசா கூடக் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால், அதில் கணிசமான விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் உயிர் தப்பி இருப்பார்கள்.

"பேட்டி பசாவோ" (பெண்களைப் பாதுகாப்போம்) என்றார் மோடி. பில்கிஸ் பானு, உன்னாவ் சிறுமி, மணிப்பூர் பெண்கள்... யாரையுமே அவரால் காப்பாற்ற முடியவில்லை. பெண்களுக்கு எதிரான குற்றவாளிகளைக் கொண்டாடும் ஒருவரால் எப்படி பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியும்? தாம்சன் ராய்ட்டர் நிறுவனம் உலகிலேயே பாதுகாப்பற்ற நாடாக இந்தியாவை 2018இல் அறிவித்துவிட்டது.

நாட்டை விட்டுத் தப்பிப் போன வாராக் கடனாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து எல்லா வாராக் கடன்களையும் வசூலித்துவிடுவோம் என்று சூளுரைத்தார்கள். தப்பியவர்களைப் பிடிக்கவில்லை. இவர்கள் பார்த்துப் பார்த்து வேண்டிய பெருமுதலாளிகளைத் தப்பிக்க விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

வாராக் கடன்கள் 1.6 மடங்கு அதிகரித்துள்ளது. மோடியின் ஆட்சியில் மட்டும் 54 லட்சம் கோடி ரூபாய் கடன்கள், வாராக் கடன்களாக உள்ளன. தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள், பெருமுதலாளிகளின் கடன்கள் 25 லட்சம் கோடி என ரிசர்வ் வங்கி, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் வெளியிட்டுள்ளது. இன்னும் பல்வேறு கணக்கியல் முறைகேடுகள் நடப்பதாக வங்கித் தொழிற்சங்கவாதிகள் பேசிக்கொள்கிறார்கள்.

எங்கே வளர்ந்திருக்கிறது இந்தியா? 1.8 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை 2013இல் தொட்டவர்கள், 2023இல் 3.7 ட்ரில்லியனைத் தொட்டுவிட்டதாகப் பெருமை கொள்கிறார்கள். பொருளாதாரத்தைக் கணக்கிடுவதில் பண வீக்கம் பெரும் பங்கு வகிக்கிறது. இதுவும் ஒரு நீர்க்குமிழி என விரைவில் தெரிய வரும். ஏனெனில் தனிமனித வருவாய் வளரவில்லை. நாட்டின் வளங்கள் எல்லாம் ஒரு 100 பேரிடம் மட்டுமே குவிந்துள்ளதை நாடு உணர்ந்துதான் உள்ளது.

காட்சிகள் மாறும். எல்லாப் பொய்களும். அம்பலமாகும்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## கரணம் தப்பினால் மரணம்

சண்டிகரில் மாநிலத் தேர்தல் கூட அல்ல, அது ஒரு மேயர் தேர்தல்தான்.

அதில் கூட 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற்று விடக்கூடாது என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால் வெறிபிடித்துச் 'சகுனித்தனம்' செய்திருக்கும் பாஜக ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு பாசிச சக்தி என்பது அம்பலமாகி உள்ளது.

மேயர் தேர்தலில் போட்டியிட்ட ஆம்ஆத்மி கட்சி, பாஜகவை விடக் கூடுதல் வாக்குகள் பெற்றுள்ளது. ஆனால் தேர்தல் நடத்திய அதிகாரி அனில் மசிஹ், ஆம்ஆத்மியின் 8 வாக்குகளைப் பேனாவில் குறியிட்டுத் 'தில்லுமுல்லு ' செய்து பாஜக வெற்றிபெற்றதாக அறிவிக்கிறார்.

ஆம்ஆத்மி உச்சநீதிமன்றம் சென்றது. அதற்குள் ஆம்ஆத்மியின் 3 உறுப்பினர்களை ஆசைகாட்டி இழுத்துக் கொண்ட பாஜக மறுதேர்தல் வைக்கலாம் என்று 'சாணக்கிய 'த்தில் இறங்கியது.

தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு அதற்கு இடம் கொடுக்கவில்லை. வழக்கை வீடியோ பதிவு, நேரடி விசாரணையின் மூலம் தேர்தல் அதிகாரியின் அத்துமீறல், ஒரு கட்சிச்சார்பு நிலையை உறுதிசெய்து, சட்டப்பிரிவு 142 இன் அடிப்படையில் ஆம்ஆத்மி வெற்றிபெற்றதாகத் தீர்ப்பை வழங்கிவிட்டது.

நீதிபதி சந்திரசூட், "சண்டிகர் மேயர் தேர்தலில் நடந்தது ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் சம்பவம். ஜனநாயகத்தை படுகொலை செய்யும் செயலாகத்தான் நான் இதனைப் பார்க்கிறேன். தேர்தல் நடத்தும் அதிகாரி சண்டிகர் மேயர் தேர்தலில் வாக்குச்சீட்டுகளைச் சிதைத்துள்ளார் என்பது அந்த வீடியோவில் வெளிப்படையாகவே தெரிகிறது. நிச்சயமாக அவர் விசாரிக்கப்பட வேண்டும்" எனக் கருத்தும் தெரிவித்துள்ளார்.

ஒரு சிறிய மேயர் தேர்தலுக்கே இப்படி 'தகிடுதத்தம்' செய்யும் மதவாக பாசிச பாஜக, அரசியல் சக்திமிக்க நாடாளுமன்றத் தேர்தலில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

'இந்தியா' கூட்டணியின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், மக்களுக்கும் சண்டிகர் ஓர் எச்சரிக்கை மணி.

கரணம் தப்பினால் மரணம். பாஜகவைத் தோற்கடிப்போம்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

## "ஒருநிமிடச்செய்தி" திறனாய்வு!




**கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்டுள்ள பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் 'ஒரு நிமிடச் செய்தி' நூல் திறனாய்வு, சென்னை அன்பகத்தில் 23-02-2024 அன்று நடைபெற்றது. திருமிகு சுகி. சிவம் அவர்களின் திறனாய்வைத் தொடர்ந்து பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஏற்புரையாற்றினார். முன்னதாகத் தோழர்கள் 'பெல்' ராஜன் தலைமையில், செல்வின் சௌந்தர்ராஜன் வரவேற்புரை, இல்லாஸ் உசேன் தொகுப்புரை நிகழ்த்தினார்கள். நிறைவில் தோழர் ஜனனி நன்றி கூறினார்.**

# மேற்கு மண்டல ஆலோசனைக் கூட்டம்






திராவிட இயக்கத் தமிழர் பேரவை மேற்கு மண்டல மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கோயம்புத்தூரில் 18-02-2024 அன்று பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு தலைமையில் நடைபெற்றது. பேரவைத் துணைத் தலைவர் மா.உமாபதி, அமைப்புச் செயலாளர் புலேந்திரன், செயற்குழு உறுப்பினர் சூலூர் தேவராஜன் ஆகியோர் முன்னிலையில், பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் கா.சு.நாகராசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.மேற்கு மாவட்டங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அதிகார வரம்பு மீறல்? பாஜகவுக்கு 335 கோடியா!

“ED, IT ரெய்டு செய்த 30 நிறுவனங்கள் பாஜகவுக்கு 335 கோடி ரூபாய் நன்கொடை கொடுத்துள்ளதை 'நியூஸ் லாண்டரி' அம்பலப்படுத்தியுள்ளது. பாஜகவின் ஊழல்கள் பலவகை. அதில் இது ஒரு புதுவகை” என்று 'நியூஸ் லாண்டரி' கட்டுரையை மேற்கோள் காட்டித் தன் X பக்கத்தில் பதிவு போட்டிருக்கிறார் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி.

ஏற்கனவே பாஜகவுக்கு நன்கொடை வழங்கி வந்த 6 நிறுவனங்கள் அமலாக்கம் மற்றும் வருமானவரித் துறை சோதனைகளுக்குப் பிறகு பாஜகவுக்கு அதிக அளவில் நன்கொடைகள் வழங்கியுள்ளன.

2018-19 மற்றும் '2022-23 நிதியாண்டுகளுக்கு இடையில், இத்தகைய சோதனைகள் நடைபெற்ற 30 நிறுவனங்கள், பாஜகவுக்கு 335 கோடி ரூபாய் நன்கொடை கொடுத்துள்ளது. இதே காலகட்டத்தில் பாஜகவுக்கு 187.58 கோடியை வழங்கிய 23 நிறுவனங்கள், பாஜக ஆட்சிக்கு வந்த 2014 முதல் சோதனை நடத்தப்பட்ட ஆண்டு வரை எந்த நன்கொடையும் வழங்கவில்லை.

மேலும், இவற்றில் குறைந்தது 4 நிறுவனங்களாவது சோதனை நடத்தப்பட்ட 4 மாதங்களுக்குள் பாஜகவுக்கு 9.05 கோடி நன்கொடை அளித்துள்ளன.

ஏற்கனவே பாஜகவுக்கு நன்கொடை வழங்கி வந்த 6 நிறுவனங்கள் சோதனைக்குப் பிறகு பாஜகவுக்கு அதிக அளவில் நன்கொடைகள் வழங்கியுள்ளன.

அதே சமயம் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் பாஜகவுக்கு நன்கொடை அளித்த 6 நிறுவனங்கள், எதாவது ஒரு ஆண்டில் நன்கொடை அளிக்க தவறிவிட்டால், அந்த ஆண்டே அந்நிறுவனங்களின் மீது அமலாக்கம்/வருமானவரித்துறை சோதனை நடத்தப்பட்டுள்ளது என்றும் நியூஸ் லாண்டரி கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.







தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற தொகை ரூபாய் 16, 518 கோடி. இதில் பாஜக மட்டும் பெற்றிருக்கும் தொகை ரூபாய் 6,565 என்பது கவனிக்கத் தக்கது.

- எழில்

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian